**<u>அசல் வழக்கு எண். 82/2013</u>**

நாள் 25.06.2019

**Name: சின்னப்பன் (வா.சா.2)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

வாதி என் உடன்பிறந்த சகோதரர். எனக்கும், என் சகோதரருக்கும் பாகம் பிரிக்கப்பட்டதற்கு ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தை எனது தம்பி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி பாகம் சுமார் 20 வருடத்திற்கு முன்பு ஏற்பட்டதாகும். வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதி என்மீதும், எனது தம்பி மீதும் அ.வ.எண்.30/91 என்ற வழக்கை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அது பிரதிவாதிக்கு சாதகமாக முடியவில்லை. அதன்மீது செய்யப்பட்ட மேல்முறையீட்டில் பிரதிவாதிக்கு சாதகமாக முடிந்தது. அதன்மீது நாங்கள் அப்பீல் செய்யவில்லை. அ.வ.எண்.30/91ல் கண்ட சொத்தும், இவ்வழக்கு சொத்தும் ஒரே சொத்துதான். வழக்கு சொத்தானது பிரதிவாதியின் வீட்டிற்கு மேல்புறம் உள்ள சந்துபகுதியாகும். பிரதிவாதியின் வீடு ஆஸ்பெஸ்டாஸ் வீடு என்றால் சரிதான். மேற்படி ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டின் வாரம் சந்துபகுதியில் ஒரு அடி நீட்டிக்கொண்டிருக்கும். அந்த சந்தில் பிரதிவாதி நடக்ககூடாது என்று நானும் என் தம்பியும் தகராறு செய்தோம் என்றால் சரிதான். அதனால் வேளாங்கண்னி எங்கள்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது. அதனால் பிரதிவாதி எங்கள்மீது நிறைவேற்று மனு சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதி வேளாங்கன்னியின் பழைய வீட்டிற்கு மேற்குபார்த்த வாசற்படியும், தெற்கு பார்த்த வாசற்படியும் உள்ளது. ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்ட வீட்டிற்கு தெற்குபார்த்த வாசற்படி. ஆஸ்பெஸ்டாஸ் போட்ட வீட்டிற்கு கிழக்கு பக்கம் பழைய வீடு உள்ளது. எனது வீட்டின் புதிய சர்வே எண்ணில் எந்த சர்வே எணிணல் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. வழக்கு சொத்திற்கு மேற்குபக்கம் எங்கள் வீடு உள்ளது. என் வீட்டிற்கு கீழ்புறம் எனது தம்பி வீடு உள்ளது.எனது தம்பி வீட்டின் புதிய சர்வே எண் எனக்குத் தெரியாது.

வழக்குசொத்தை வேதநாயகம் கிரையம் வாங்கிய விபரம் எனக்குத் தெரியும். அந்த பத்திரம் என்னிடம் உள்ளது. தாவா சொத்தை வேதநாயகம் கிரையம் வாங்கவில்லையென்றும் எனது தந்தை கிரையம் வாங்கிய பத்திரத்தில் தாவா சொத்து கட்டுப்பட்டதில்லை என்றாலும் சரியல்ல. வாதியின் அப்பாவும், எனது தந்தையும் கிரையத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள். வழக்கு சொத்தான சந்துபகுதியை எனது தந்தையான வேதநாயகமோ, நானோ, எனது சகோதரரோ எந்தகாலத்திலும் அனுபவம் செய்யவில்லையென்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றும், ஏற்கனவே பிரதிவாதிக்கு சாதகமாக முன்தீர்ப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட வாதி எனது சகோதரர் என்பதால் முன்தீர்ப்பிற்கு எதிரானதாக இன்னொரு வழக்கை தாக்கல் செய்து அவருக்காக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- திரு.எம்.பரமசிவம்,பி,காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.